# செங்கல்பட்டு நகராட்சி

## சாதாரணக் கூட்டம்

**2018ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24ம் தேதி முற்பகல் 10.30 மணியளவில் செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெற்ற சாதாரணக் கூட்டம்.**

----

**பொருள் – 1**

நகராட்சி ஆணையர் அவர்களின் ஆகஸ்ட் – 2018 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் – 2**

நகராட்சி பொறியாளர் அவர்களின் ஆகஸ்ட் – 2018 ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் – 3**

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனம் 2018–19க்கான தினசரி காய்கறி நாளங்கடியில் தினம் கடை ஒன்றுக்கு ரூ.20/– மற்றும் ரூ.10/– வீதம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 18.9.2018ம் தேதியன்ற நடைபெற்ற குறுகிய கால மறு ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளியில் திருமதி ஜெ. ராணி என்பவர் உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளி தொகையாக ரூ.9,72,000/– கோரியுள்ளார். மேலும் 2009–10 ம் ஆண்டு குத்தகை தொகை ரூ.3,25,000/– ம் குத்தகை உரிமம் வழங்கப்பட்டுள்ளது. 2012–13ம் ஆண்டு குத்தகை தொகை ரூ.5,05,001/– க்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டுள்ளது. மற்றும் 2015–16ம் ஆண்டு தொகை ரூ.20,03,501/– க்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டது. ஆனால் கடந்த ஆறு ஆண்டுகளை விட 2015–16ம் ஆண்டு குத்தகைதாரர் மூன்று மடங்கு குத்தகை உரிமம் பெற்றும் 2016–17ம் ஆண்டு இந் நகராட்சிக்கு எதிராக பொய்யான வழக்கு தொடர்ந்தார். மேலும் குத்தகை தொகை மிக உயர்வாக உள்ளது என்றும் புகார் தெரிவித்தார். மற்றும் 2016–17, 2017–18 இரண்டு ஆண்டு கால குத்தகை தொகையினையும் செலுத்தாமல் உள்ளார். வழக்கு நிலுவையில் உள்ளதால் நிலுவை தொகை வசூலிக்காமல் நிலுவையில் உள்ளது.

மேற்படி 2018–19ம் ஆண்டு புதிய குத்தகை உரிமத்திற்கு பொது ஏலம் நடத்தப்பட்டது. அதனை எதிர்த்து 2015–16ம் ஆண்டு குத்தகைதாரர் சென்னை உயர்நீதி மன்றத்தில் ஏலம் நடத்துவதற்கு தடை கோரி வழக்கு தொடர்ந்தார். மேலும் இந் நகராட்சி சார்பாக வழக்காடி

அவ்வழக்கினை தள்ளுபடி செய்யப்பட்டது. மேலும் 12.7.2018ம் தேதி முதல இந் நகராட்சி பணியாளர்களை கொண்டு துறை வசூல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாள் ஒன்றுக்கு தோராயமாக ரூ.2500/– வசூல் செய்யப்படுகிறது. ஒரு வருடத்தற்கு ( 2500 X 365 = 9,12,500/–) வசூலிக்கும் தொகை ரூ.9,12,500/– மேலும் துறை வசூல் செய்யும் வருவாய் ஆய்வர், வருவாய் உதவியாளர் மற்றும் அலவலக உதவியாளர் ஆகியோரது ஒரு மாத ஊதியம் மொத்தம் ரூ.1,26,000/–ஒரு வருடத்திற்கான மொத்த ஊதிய தொகை ரூ.15,12,000/– ஆகும். எனவே இதனால் இந் நகராட்சிக்கு ரூ.5,99,500/– இழப்பிடாக வாய்ப்புள்ளது. எனவே 18.9.2018ம் தேதியன்று நடைபெற்ற குறுகிய கால மறு ஒப்பந்தபுள்ளியில் உயர்ந்த பட்ச தொகை ரூ.9,72,000/– ஒப்பந்ததாரர் திருமதி ஜெ. ராணி என்பவருக்கு முன்னுரிமை அளித்து 2018–19ம் ஆண்டு தினசரி காய்கறி நாளங்காடியில் வசூல் செய்வதற்கான குத்தகை உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

2009–10ம் அண்டு முதல் 2012–13ம் ஆண்டு வரை குத்தகை எடுக்கப்பட்ட தொகையினை விட மூன்று மடங்கு 2015–16ம் ஆண்டு குத்தகை எடுக்கப்பட்டு 2016–17 மற்றும் 2017–18ம் ஆண்டு குத்தகை தொகையில் நிலுவையாக உள்ளதாலும் இந் நகராட்சி மூலம் துறைவசூல் மேற்கொள்ளப்படுவதில் இழப்பீடு ஏற்படா வண்ணம் நடவடிக்கை மேற்கொள்ளவும், திருமதி ஜெ.ராணி, என்பவர் கோரிய உயர்ந்தபட்ச தொகை ரூ.9,72,000/–ஐ பெற்றுக் கொண்டு குத்தகை உரிமம் வழங்க மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (ந.க.எண்084/2018/அ1)

**பொருள் – 4**

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனம் 2018–19ம் ஆண்டு தசரா வரி வசூல் உரிமத்திற்கு 18.9.2018 ம் தேதியன்று நடைபெற்ற குறுகியகால மறுஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளியில் திரு கே. நாராயணன் என்பவர் உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளி தொகையாக ரூ.11,40,000/– கோரி இருந்தார். மேலும் 2017–18ம் சர்கார் மதிப்பு ரூ.11,68,650/–ஆக உள்ளது. மேற்படி ஒப்பந்ததாரர் சர்கார் மதிப்பினை விட தொகை ரூ.11,70,000/– (ரூ.பதினொறு இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து 18.9.2018 ம் தேதி கடிதம் அளித்துள்ளார். எனவே தசரா பண்டிகை அக்டோபர் மாதம் 8.10.2018 ம் தேதி முதல் 10 நாட்கள் பெற உள்ளதால் அவசர அவசியம் கருதி ஒப்பந்ததாரர் திரு கே. நாராயணன் மேற்படி 2018–19ம் ஆண்டு குத்தகை உரிமத்திற்கான தொகை ரூ.11,70,000/– ஐ செலுத்துவதற்கு முன் வந்துள்ளதால் மேற்படி தொகை சர்கார் மதிப்பினை விட உயர்வாக உள்ளதாலும் மேற்படி ஒப்பந்ததாரருக்கு தசரா குத்தகை உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

தசரா பண்டிகை நடைபெற குறுகிய நாட்களே உள்ளதால் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற முன்அனுமதியுடன் நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் பின்னேற்ப்பு வழங்கலாம்.

(ந.க.எண்.084/2018/அ1)

**பொருள்–5**

செங்கல்பட்டு நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 2018–19 பொது சுகாதார பிரிவின் குறிப்பின்படி கீழ்குறிப்பிட்டுள்ள வாகனங்கள் இயந்திரங்கள் தூய்மை இந்தியா திட்ட நிதியின் கீழ் வாங்குவதற்கு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இச் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து செலவு செய்யலாம்.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சிக்கு தேவைப்படும் 8 எண்ணிக்கையிலான Battery Operated Vehicle வாங்கும் பணி | ரூ.14.40 லட்சம் |
| 2 | செங்கல்பட்டு நகராட்சிக்கு தேவைப்படும் 5 எண்ணிக்கையிலான Light Commercial Vehicle வாங்கும் பணி. | ரூ.28.00 லட்சம் |
| 3 | செங்கல்பட்டு நகராட்சியின் எம்.சி.சி. மற்றும் ஒ.சி.சி. தேவைப்படும் இயந்திரங்கள் வாங்கும் பணி. | ரூ.28.00 லட்சம் |
| | மொத்தம் | ரூ.70.40 லட்சம் |

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் – 6**

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான சமுதாய கூடத்தின் குத்தகை உரிமம் 19.2.2018 ம் தேதி முதல் திரு எ. கண்ணன் என்பவருக்கு வழங்கப்பட்டது. ஆனால் குத்தகைதாரர் இந் நகராட்சியின் அனுமதியின்றி குத்தகை உரிம நிபந்தனைக்கு மாறாக மேற்படி சமுதாய கூடத்தின் சுற்றுச்சுவரை இடித்துள்ளார். மேலும் சமுதாய கூட வளாக பகுதியில் கூடுதல் கட்டிடம் கட்டியுள்ளார். மேற்படி முன்பகுதி சுவரை முன்பு உள்ளவாறு சரி செய்யும்படியும் கூடுதலாக கட்டப்பட்ட கட்டிடத்தினை அகற்ற கோரியும் அதற்கான விளக்கம் அளிக்க கோரியும் 14.8.2018 ம் தேதியன்று அறிவிப்பு கடிதம் குத்தகைதாரருக்கு அனுப்பப்பட்டது. ஆனால் எந்த ஒரு விளக்கமும் வராததால் 27.8.2018 ம் தேதியன்று இறுதி அறிவிப்பு கடிதமும் அனுப்பப்பட்டது. அதற்கும் குத்தகைதாரர்

விளக்கம் ஏதும் அளிக்காததால் இந் நகராட்சியின் அனுமதியின்றி கட்டப்பட்ட கூடுதல் கட்டிடத்தினை மூடி சீல் வைத்து துறை ரீதியான மேல் நடவடிக்கை தொடர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் – 7

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வணிக பகுதிகளிலுள்ள அனைத்து கடைகளுக்கும் திடக்கழிவுகளை அப்புறப்படுத்த சேவைக் கட்டணம் நிர்ணயிக்க வேண்டியுள்ளது. செங்கல்பட்டு நிர்வாகத்தின் மூலம் இயற்றப்பட்ட திடக்கழிவு மேலாண்மை விதிகளின் சேவைக்கட்டணப் பட்டியலின் கீழ் ஒரு சில கடைகளுக்கு சேவைக் கட்டணம் நிர்ணயிக்க இயலாத நிலை உள்ளது. எனவே அந்த வகையான கடைகளுக்கு குறைந்தபட்ச கட்டணமாக மாதத்திற்கு சிறிய அளவிலான கடைக்கு ரூ.150/– நடுத்தர மற்றும் பெரிய அளவிலான கடைகளுக்கு ரூ.500/–ம் நிர்ணயிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ஏற்கனவே கா.மா.அரசிதழ் த.நா.அரசு ஆணையின்படி காஞ்சிபுரம் ஜூலை 1, 2017 ஆனி 17 ஹேவிளம்பி திருருள்ளுவர் ஆண்டு 2048 வெளியிடப்பட்டது)

அலுவலக குறிப்பு–

1) அனுமதி அளிக்கலாம்.
2) அவசர அவசிய நிமித்தம மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்ற நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு வழங்கலாம்.

பொருள் – 8

செங்கல்பட்டு நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மூன்ற சக்கர வாகனங்கள் பெறப்பட்டபின் கிட்டதட்ட அனைத்து வீடுகளிலும் (படிக்கட்டு வீடுகள் தவிர) டோர் டு டோர் கலெக்ஷன் ( door to door collection ) நடைபெறுவதாலும், மக்கும் குக்பைகளை உரமாக்கி வருகிறோம். மேலும் மக்காத குப்பைகளை டம்பர் பிளேசர் மற்றும் காம்பேக்டர் மூலமாக குப்பைக் கிடங்கில் கொட்டும் நிலையை மாற்றி குப்பை கிடங்கை Bio-Mining மூலம் அகற்றிட தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ஒப்புதல்

அளிக்கப்பட்டுள்ளது. இதனால் நம் மக்காத குப்பைகளை அரியலூர் அல்ட்ரா டெக் சிமெண்ட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலமாக வாரம் ஒரு முறை ஒன்றிலிருந்து இரண்டு லோடுகள் மக்காத குப்பையை அனுப்புகின்றோம். தற்போது நகராட்சி நிர்வாக ஆணையர், மற்றும் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குனர், செங்கல்பட்டு அவர்களின் அறிவுரையின் பேரில் வாரம் 5 முதல் 6 லோடுகள் மக்காத குப்பையை அனுப்ப வேண்டி இருப்பதால் வெளியிலிருந்து சரக்கு லாரியின் மூலம் அனுப்ப நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் கடித மூலம் இசைவு வழங்கப்பட்டுள்ளது. மேலும் இதற்கு செலவினமாக லோடு ஒன்றுக்கு ரூ.15,000/–வரை செலவாகும் நிலையில் மாதம் ஒன்றுக்கு 25 லோடு வீதம் 3 மாதங்களுக்கு 75 லோடுக்கு (ரூ.11,25,000/–) தோரய செலவினமாக ரூ.9.90 இலட்சம் ரூபாய் பொது நிதியிலிருந்து செலவிட நிர்வாக மண்டல இயக்குனர் அவர்களின் நேரடி அறிவுரையின் பேரில் மேற்கண்ட செலவினம் செய்துக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) அனுமதி அளிக்கலாம்.
2) அவசர அவசிய நிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு வழங்கலாம்.

பொருள் – 9

இந் நகராட்சியில் பணி ஒப்பந்ததாரராக உள்ள திரு க. வெங்கடேசலு என்பவர் இந் நகராட்சிக்குட்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கலந்து கொண்டார். அதற்கான பணி அவருக்கு கிடைக்கப்பெற்றது. மேற்படி பணிக்கான உத்திரவு வழங்கப்பட்டு பணியும் முடிவு பெற்றது. எனவே மேற்படி பணியில் திரு க. வெங்கடேசலு அவர்களிடம் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பணிதரக்காப்பு தொகையினை திரும்ப வழங்க கோரியுள்ளார். தொகை பின்வருமாறு.

1) ரூ.90,000/–
2) ரு.49,500/–

மேலும் மேற்படி பணி முடிக்கப்பட்டுவிட்டதாக நகராட்சி பொறியாளர், உதவி பொறியாளர், குறிப்பின்படி தொகை திரும்ப வழங்கவும், மேற்படி பணியில் 2014–15ம் ஆண்டு தணிக்கை தடை ஏதுமில்லை என தணிக்கை எழுத்தர் தனது குறிப்பில் தெரிவித்துள்ளார். எனவே மேற்படி

மனுதாரரிடம் பிடித்தம் செய்யப்பட்ட பணிதரக்காப்பு தொகையினை திரும்ப வழங்க மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

பொருள் – 10

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட திருக்கழுக்குன்றம் சாலையில் உள்ள இராட்டிண கிணறு அருகில் பேருந்து நிறுத்தம் அருகே ஜி 1059 செங்கல்பட்டு பால்நுகர்வோர் கூட்டுறவு சங்கம் லிட் அவர்கள் தற்காலிக ஆவின் பாலகம் வைக்க அனுமதி கேட்டதின் பேரில் இந்த இடத்தில் மேற்படி பாலகம் அமைக்க செங்கல்பட்டு காவல் ஆய்வாளர் அவர்கள் மூலம் தடையின்மை சான்று வழங்கப்பட்டுள்ளது. இந் நிலையில் இந்த பங்க் ( 6 X 10) என்ற அளவில் அமைக்க மாதம் ரூ.904/— வசூல் செய்ய வேண்டும் என நகராட்சி பொறியாளர் குறிப்பும் வழங்கியுள்ளார். எனவே இதனடிப்படையில் மேற்படி நிறுவனத்திற்கு நகராட்சி நிபந்தனைகளின்படி தற்காலிக பால் பங்க் வைக்க அனுமதி வழங்க, மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் – 11

இந் நகராட்சியில் பணி ஒப்பந்ததாரராக உள்ள திரு ஜி. மனோகர் என்பவர் இந் நகராட்சிக்குட்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கலந்து கொண்டார். அதற்கான பணி அவருக்கு கிடைக்கப்பெற்றது. மேற்படி பணிக்கான உத்திரவு வழங்கப்பட்டு பணியும் முடிவு பெற்றது. எனவே மேற்படி பணியில் திரு க. வெங்கடேசலு அவர்களிடம் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பணிதரக்காப்பு தொகையினை திரும்ப வழங்க கோரியுள்ளார். தொகை பின்வருமாறு.

1) அறிஞர் அண்ணா உயர்நிலைப் பள்ளியில் முதல் தளம் அமைக்கும் பணி— ரூ.75,000/—

மேலும் மேற்படி பணி முடிக்கப்பட்டுவிட்டதாக நகராட்சி பொறியாளர், உதவி பொறியாளர், குறிப்பின்படி தொகை திரும்ப வழங்கவும், மேற்படி பணியில் 2015—16ம் ஆண்டு தணிக்கை தடை ஏதுமில்லை என தணிக்கை எழுத்தர் தனது குறிப்பில் தெரிவித்துள்ளார். எனவே மேற்படி மனுதாரரிடம் பிடித்தம் செய்யப்பட்ட பணிதரக்காப்பு தொகையினை திரும்ப வழங்க மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

பொருள் – 12

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட தேவராஜனார் தெரு கதவு எண்ண் 23 விலாசத்தில் வசித்து திரு ஸ்ரீதரன் என்பவர் அவர் தம் வீட்டின் பின்புறம் உள்ள மழைநீர் கால்வாயில் கழிவுநீர் தேக்கமடைந்துள்ளதை அகற்றுமாறு தெரிவித்து வழக்கு தொடர்ந்துள்ளதை இந் நகராட்சியின் சார்பில் வாதிட அரசு வழக்கறிஞர் திரு ஆர். வினாயகம் என்பவரிடம் வழக்கை ஒப்படைக்கவும் வழக்கிற்கான தொகை ரூ.10,000/–த்தினை அன்னாருக்கு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) அனுமதி வழங்கலாம்.
2) அவசர அவசியநிமித்தம் நகர மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டு தொகை வழங்கப்பட்டமைக்கு பின்னேற்ப்பு வழங்கலாம்.

பொருள் – 13

இந் நகராட்சி வருவாய் நிதி, குடிநீர் நிதி மற்றும் வடிகால் நிதி மற்றும், கல்வி நிதிக்கு 2017–18ம் ஆண்டுக் கணக்குகள் உடனடியாக முடித்து தணிக்கைக்கு உட்படுத்த வேண்டியுள்ளதால் கீழ்கண்டுள்ள நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | GSOFT SYSTEM | ரூ.80,000/– |
| 2 | CWISON SOLUTION | ரூ.82,500/– |

அலுவலக குறிப்பு–

1) மேற்கண்ட நிறுவனங்களில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய GSOFT SYSTEM என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) தனி அலுவலர் அவர்களின் முன் அனமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கும் வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் பின்னேற்ப்பு வழங்கலாம்.

பொருள் – 14

இந் நகராட்சி 2018–19 ம் ஆண்டு சொத்துவரி சீராய்வு செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்கள் கடித ந.க.எண். 20555/2018/ஆர்1 நாள் 30.7.2018ன்படி சொத்துவரி உயர்வு செய்ய அதற்கான படிவம் கூட்டுறவு அச்சகங்களில் அச்சிட்டுக் கொள்ள பெறப்பட்டுள்ள மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | எண்ணிக்கை | சங்குநகர் எழுது பொருள் அச்சகம் | வடக்குளம் எழுது பொருட்ள் அச்சகம் | தி சென்னை பிரிண்டர்ஸ் ஸ்டேஷனரி |
|---|---|---|---|---|---|
| 1 | சொத்துவரி சுயமதிப்பீட்டு படிவம் | 100 | ரூ.247.80 | ரூ.295.00 | ரூ.283.20 |
| 2 | வரிவிதிப்பு கணக்கீட்டு படிவம் | 100 | ரூ.171.10 | ரூ.236.00 | ரூ.306.80 |
| 3 | ஸ்கிப்ரிங் பேட் | 1 | ரூ.80.00 | ரூ.90.00 | –– |
| 4 | பிளாஸ்டிக் பேட் | 1 | ரூ.28.00 | ரூ.35.00 | –– |
| | மொத்தம் | | ரூ.526.90 | ரு.656.00 | ரூ.590.00 |

அலுவலக குறிப்பு–

1) வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திருவா. சங்குநகர் எழுதுபொருள் கூட்டுறவு அச்சகம், சென்னை அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2) மன்ற தீர்மானம் எண். 532 நாள் 31.7.2018ல் எழுதுபொருட்கள் வாங்க ரூ.7.00 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதல் எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று சொத்து வரி சீராய்வு முன்னிட்டு மேற்படி படிவம் அச்சிட்டு வழங்க உத்திரவு வழங்கியதற்கு மன்றம் பின்னேற்ப்பு அளிக்கலாம். (ந.க.எண்.2990/2005/பி2)

பொருள் – 15

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 22660/2018/டி.பி.4 நாள் 25.9.2018ல் மத்திய அரசின் கொள்கை முடிவுகளின்படி கட்டிட அனுமதி வழங்கும் முறையினை எளிமைபடுத்தவும் கட்டிட விண்ணப்ப பரிசீலனைக்கான கால அளவினை குறைக்கவும், பொது மக்கள் விண்ணப்பங்களையும், கட்டணங்களையும் இருந்த இடத்தில் இருந்தே இணைய தளவழியாக செலுத்திடவும் அதற்கான Software உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருவதால் கீழ்கண்டுள்ள வழிமுறைகளை நகரமைப்பு ஆய்வர்கள் மற்றும் கணினி உதவி திட்ட அமைப்பாளர்கள் பின்பற்ற வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

1) கூர்ந்தாய்வுக் கட்டணம் ஒவ்வொரு நகராட்சிக்கும் ரூ.500/– ஐ கட்டிட விண்ணப்பம் சமர்ப்பிக்கும் சமயத்தில் இணையதள வழி வாயிலாக செலுத்த கணினி உதவி திட்ட அமைப்பாளர் மாறுதல் செய்யப்பட வேண்டும்.

2) தகவல் மையத்தில் அனைத்து விண்ணப்பங்களும் பெறுவதால் முழுமையாக விண்ணப்ம் செய்யாமல் நகரமைப்பு ஆய்வர் மனுதாரர்களிடம் ஆவணங்கள் பெற்று கணினியில் உள்ளீடு செய்யும் நிலை உள்ளதால் பொது மக்கள் சிரமப்படுவதுடன் On line Concept ன் அடிப்படையில் கொள்கைக்கு முரணாக உள்ளது. அதனால் அனைத்து விண்ணப்பங்களும் சம்மந்தப்பட்ட மனுதாரர்களே நேரடியாக அல்லது நகராட்சியால் அங்கீகாரம் செய்யப்பட்ட படவரைவாளர்கள் வாயிலாகவோ On line இல் விண்ணப்பம் செய்திட ஊக்குவிக்கும் வகையில் நகரமைப்பு ஆய்வர்கள் மற்றும் கணினி திட்ட அமைப்பாளர் வாயிலாக அனைத்து அங்கீகாரம் பெற்ற படவரைவாளர்களுக்கு உரிய பயிற்சி அளிக்க வேண்டும் என்றும் CPC விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் தவிர்க்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) கட்டணம் செலுத்திட மனுதாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு குறுந்தகவல் மின்னஞ்சல் சென்றடைந்து 15 தினங்களுக்குள் கட்டணம் செலுத்த தவறினால் கோப்பு முடிக்கப்படும் வகையில் UTIS மென் பொருளில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் இந்த நடைமுறை 15.10.2018 முதல் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதால் அனைவரும் தெரிந்துக் கொள்ளும் வகையில் LBS வாயிலாகவும் விண்ணப்பம் சமர்ப்பிக்கும் சமயத்திலும் கட்டணம் செலுத்த கேட்பு அனுப்பும் சமயத்திலும் மனுதாரருக்கு தெரிவிக்க கோரப்படுகிறது.

4) ஆதார் எண்ணுடன் கூடிய அத்தாட்சி கடவு சீட்டு ( Author Authentication) Digital Signature ) – இ முத்திரையிடப்பட்டுள்ளது. நகரமைப்பு ஆய்வர்கள் பெயரில் வாங்கிடவும் அதனை செயல் படுத்தவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5) கட்டணங்களை இணையதள வழி வாயிலாக மனுதாரர்கள் செலுத்தவும் கட்டண விகிதங்களை தானாகவே கணக்கீட்டு செய்யும் வகையில் மென் பொருளில் கட்டண விகிதங்களை இணைக்க தேவையான வசதிகளை கணினி உதவி திட்ட அமைப்பாளர் ஏற்படுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

6) இனி வரும் காலங்களில் கட்டிட அனுமதி உத்திரவு மற்றும் வரைபடங்களில் உத்திரவு வழங்கம் அலுவலரின் Digital Signature உடன் கூடிய உத்திரவு On line வாயிலாக மட்டுமே வழங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆணையர் / நகரமைப்பு ஆய்வர்கள் ஆதார் அத்தாட்சியுடன் கூடிய Digital Signature “ Cdac” ல் நடவடிக்கை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படியான வழிமுறைகளை கையாள வேண்டிய தகவல் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.1952/2018/எப்1)

**பொருள் – 16**

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான பழவேலி சுடுகாட்டில் நவீன எரிவாயு தகன மேடை அமைக்க ஒப்பந்ததாரர் ஜுவாலா எக்யூப்மெண்ட்ஸ் அவர்களுக்கு பணி ஒப்படைத்த நிலையில் அன்னார் பணியினை சரிவர முடிக்காத காரணத்தால் முழுமையான தொகை வழங்கப்படாமல் நிறுத்தப்பட்டது. இந் நிலையில் இந்த நிறுவனத்தார் தொகை வழங்க கேட்டு மதுரை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்து இது நாள் வரை நடைபெற்று வருகிறது. இந் நிலையில் இவ்வழக்கினை எதிர்த்து இந் நகராட்சியின் சார்பாக வாதிட சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் திரு பி. சீனிவாஸ் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதால் இதற்கான வழக்காடு கட்டணம் ரூ.25,000/–ஐ அன்னாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**பொருள் – 17**

செங்கல்பட்டு நகராட்சி புதிய பேருந்து நிலையம் எதிரில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் தந்தை பெரியார் வணிக வாளகம் பின்புறம் இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் அமைக்கவும், தரை தளம் அமைத்து சிறுபாலம் அமைக்கவும் சுற்றி இரும்பு வேலி அமைக்கவும் மதிப்பீடு தொகை ரூ.7.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் – 18**

செங்கல்பட்டு நகராட்சியில் ஒவ்வொரு வருடமும் 100 ஆண்டுகள் பழமை கொண்ட தசரா திரு விழா புரட்டாசி மாதத்தில் 10 நாட்களுக்கு நடைபெறும். இவ்வருடம் நடைபெறும் தசரா விழாவிற்கு பொது மக்களின் பொது சுகாதார அவசியம் கருதி 4 எண்ணிக்கை கொண்ட மொபைல் கழிப்பறை அமைக்க மதிப்பீடு தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் – 19**

செங்கல்பட்டு நகராட்சி அனைத்து வார்டுகளிலும் கொசுப்புழு ஒழிக்கும் பணிகள் விழிப்புணர்வு அறிவிப்புகள் மற்றும் கொசுப்புழு இல்லாத வீடுகளுக்கு பாராட்டி 2000 நோட்டீஸ் ஒட்டும் பணிக்கு தோராய தொகை ரூ.25,000/–யை பயன்படுத்த மன்ற தீர்மானம் எண். 539 நாள் 31.7.2018 ல் அனுமதி பெறப்பட்டதின் பெயரில் 12.9.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரபபட்டது. இதில் கீழ்கண்டுள்ள 2 ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளன

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி தொகை | வைப்பு தொகை | ஒப்பந்தபுள்ளி படிவம் |
|---|---|---|---|---|
| 1 | திரு மனோகர் | ரூ.25,000/– | ரூ.250/– | ரூ.336/– |
| 2 | திரு கே. வெங்கடேசலு | ரூ,.24950/– | ரூ.250– | ரூ.336/– |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண். 2 ல் கண்டுள்ள வெங்கடேசலு என்ற ஒப்பந்தபுள்ளி குறைவாக இருப்பதால் இதனை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) அனுமதி வழங்கலாம்.
2) அவசர அவசியநிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்ப்பு வழங்கலாம்.

**பொருள் – 20**

செங்கல்பட்டு நகராட்சியின் உரக்கிடங்குகளில் மக்கும் குப்பைகளை உரமாக்கும் பணிக்கு திடநிலையில் உருவாக்குவதற்கு பயன்படுத்தும் பொருட்கள் வாங்க தோராய தொகை ரூ.1.00 இலட்சத்தில் வாங்கி கொள்ள மன்ற தீர்மானம் எண். 538 நாள் 31.7.2018 ல் அனுமதி பெறப்பட்டதின் பெயரில் 12.9.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரபபட்டது. இதில் கீழ்கண்டுள்ள 2 ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளன

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி தொகை | வைப்பு தொகை | ஒப்பந்தபுள்ளி படிவம் |
|---|---|---|---|---|
| 1 | திரு கே. வெங்கடேசலு | ரூ.1,04,250/– | ரூ.1000/– | ரூ.336/– |
| 2 | திரு மனோகர் | ரூ.96,075/– | ரூ.100/0– | ரூ.336/– |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண். 2 ல் கண்டுள்ள ஜி. மனோகர் என்ற ஒப்பந்தபுள்ளி குறைவாக இருப்பதால் இதனை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

1) அனுமதி வழங்கலாம்.
2) அவசர அவசியநிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்ப்பு வழங்கலாம்.

பொருள் – 21

செங்கல்பட்டு நகராட்சிகுட்பட்ட வார்டுகளில் ஒரு சில இடங்களில் உருவாகும் மக்கும் குப்பைகளை வாகனங்கள் மூலம் எடுத்து அப்புறப்படுத்த இயலாத நிலையில் உள்ள அந்த இடங்களில் சின்டெக்ஸ் டேங் வைத்து மக்கும் குப்பைகளை உரமாக தயாரிக்க தோராய தொகை ரூ.0.50 இலட்சத்தில் பணி செய்ய 31.7.2018 ல் அனுமதி பெறப்பட்டதின் பெயரில் 12.9.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரபபட்டது. இதில் கீழ்கண்டுள்ள 2 ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளன

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி தொகை | வைப்பு தொகை | ஒப்பந்தபுள்ளி படிவம் |
|---|---|---|---|---|
| 1 | திரு மனோகர் | ரூ.50,500/— | ரூ.500/— | ரூ.336/— |
| 2 | திரு கே. வெங்கடேசலு | ரூ.49,945/— | ரூ.500— | ரூ.336/— |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண். 2 ல் கண்டுள்ள வெங்கடேசலு என்ற ஒப்பந்தபுள்ளி குறைவாக இருப்பதால் இதனை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

1) அனுமதி வழங்கலாம்.
2) அவசர அவசியநிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்ப்பு வழங்கலாம்.

பொருள் – 22

செங்கல்பட்டு நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் தினசரி குப்பைகள் அள்ள பயன்படும் டம்பர் பிளசர் வாகனம் எண். டி.என். 21 எ.ஒய். 8890.கு தகுதி சான்று பெற வேண்டி உள்ளதால் அதில் உள்ள பழுதுகள் சரி செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

அனுமதி வழங்கலாம்.

**பொருள் –23**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், சுற்று சுவரில் தூய்மை இந்தியா திட்டம் குறித்த விழிப்புணர்வு ஒவியங்கள், சுற்றுலா தளங்கள் குறித்த விழிப்புணர்வு ஒவியங்கள் அமைக்கவும் தோராய மதிப்பீடு ரூ.**2.00** இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் –24**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பயன்படும் குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் குடிநீர் பிரதான குழாய் உடைப்பு மற்றும் கசிவு ஏற்படுவதை சரி செய்யும் பணிகளுக்கு மதிப்பீடு தொகை ரூ.**9.90** இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் – 25**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். **27** குண்டூர் நகராட்சி பள்ளியில் அமைக்கப்பட உள்ள சமூகநல சுத்திகரிப்பு நிலையத்தின் நீர் ஆதார பொது கிணற்றினை தூர் வாரி அதற்கு இரும்பு வேலி அமைக்கும் பணிக்கு தோராய மதிப்பீடு தொகை ரூ.**1.10** இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் – 26**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட கதவு எண். **21**எ, பெரியார் தெருவில் அமைந்துள்ள சொத்துவரி வணிக பயன்பாட்டு கட்டிடத்தின் சொத்து வரி விதிப்பு எண். **140110**க்கு திருமதி வரதம்மாள் க/பெ. எல். பழனி என்பவர் சொத்துவரி அதிகமாக வரிவிதிக்கப்பட்டதற்கு என செங்கல்பட்டு மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் நகராட்சியை எதிர்த்து வழக்கு எண். **406/2009** ஐ.எ.எண். **1018/2009** நாள் **5.11.2009** நடைபெற்று வந்துள்ளது. மேலும் லோக் அதாலத் மூலம் **6.12.2014** வழக்கு நடைபெற்று தற்போது **35** சதவீதம் லோக்அதாலத் தீர்ப்பின்படி அன்னாருக்கு சொத்துவரி விரிவிதிப்பு எண்.**140110** அரையாண்டு சொத்துவரி தொகை ரூ.**5080/–**ல் **35** சதவீதம் ரூ.**1778/–** தொகை குறைத்து தற்போது வரித் தொகை ரூ.**3302/–** என நிர்ணயம்

செய்து லோக் அதாலத் மூலம் உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்படி உத்திரவின்படி மனுதாரருக்கு 2007–08 முதல் அரையாண்டு முதல் 2018–19 இரண்டாம் அரையாண்டு வரை 25 அரையாண்டுகளுக்கான வரித் தொகையினை லோக் அதாலத் தீர்ப்பின்படி 35 சதவீதம் குறைத்து 2007–08 முதல் அரையாண்டு முதல் ரூ.3302/– என நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

லோக் அதாலத் நீதிமன்ற உத்திரவிற்கு இணங்க மன்றம் மனுதாரருக்கு சொத்துவரி விதிப்பு எண். 140110க்கு மறு நிர்ணயம் செய்ய அனுமதி வழங்கலாம்.

**பொருள் – 27**

நகராட்சி ஒப்பந்ததாரர்கள் பட்டியலில் பிடித்தம் செய்யப்படும் ஜி.எஸ்.டி 2 சதவீதம் டி.டீ.எஸ் மூலம் அரசு கணக்கில் செலுத்தும்படி மத்திய அரசின் Yogesh tiwalitcs/CBEC circular No. 65/39/2018 – DOR – F.No.S.31011/11/2018 – ST-I-DOR – Government of India Ministry of Finance Department of Reenue, New Delhi dated 14th September 2018 ல் வரப்பெற்ற கடிதம் மனறத்தின் பார்வைக்கும் தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் பதிவு செய்யலாம்.

தனி அலுவலர்,
செங்கல்பட்டு நகராட்சி.